**அறிவாற்றல் சமூகத்திற்கான கல்விச் செயற்திட்டம் - 2013**

அறிவாற்றல் சமூகத்திற்கான கல்விச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபீ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2007 திசெம்பர் 18 ஆந் திகதிய 2371 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.02(ஏ) ஆம் பிரிவு மற்றும் 0091-எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

அறிவாற்றல் சமூகத்திற்கான கல்விச் செயற்திட்டத்தின் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் படி, செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக கல்வி அமைச்சு உள்ளது. ஊழியர் சந்தை தேவைகளுக்கான அதிகரித்த இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் தொடர்பை அதிகரித்தல் அதன் விளைவாக கல்விகற்ற இளைஞர்களின் வேலை வாய்ப்பை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் எதிர்பாரக்கப்பட்ட பின்விளைவாகும். செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் விளைதிறன் அதிகரித்த தரம், பொருத்தப்பாடு, பயனுறுவிளைவு மற்றும் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியை அணுகுவதின் சமநிலை என்பதாகும்.

கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 11,267 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 105 மிலிலியானதுடன் அதில் கடனாக ரூபா 6,955 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 65 மில்லியனும் மானியமாக ரூபா 1,605 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 15 மில்லியனும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் செயற்பாடுகளை 2008 மார்ச் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2013 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. 2012 மார்ச் 16 ஆந் திகதிய ஆசிய அபிவிருத்தி வங்கி விஞ்ஞாபனத்தின்படி, செயற்திட்ட பூர்த்தியாக்கல் திகதி 2014 யூன் 30 வரை நீடிக்கப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்குவதும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக்

கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் ஆகியோரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப வைப்பு, அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**3. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்குகளிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்குப்வேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**4. நிதிக்கூற்றுக்கள்**

**4.1 நிதிசார் செயலாற்றல்**

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 1,973,186,144 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 9,265,670,955 ஆகும். ஒவ்வொரு விடயத்தின் கீழான மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பனவற்றின் பெரிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 835,008,510 | 802,107,067 | 3,385,014,658 |
| உபகரணங்கள் | 235,183,099 | 423,653,045 | 2,220,950,059 |
| தளபாடங்கள் | 57,284,091 | 42,600,440 | 282,717,548 |
| வாகனங்கள் | - | - | 46,592,327 |
| பொருட்கள் | 22,003,587 | 83,423,127 | 371,774,838 |
| பதவியினர் அபிவிருத்தி - | | | |
| - உள்ளூர் பயிற்சி | 234,296,144 | 202,676,382 | 1,043,003,268 |
| - வெளிநாட்டுப் பயிற்சி | 337,225 | 40,350,100 | 91,747,345 |
| ஆலோசனை | 3,308,966 | 87,683,499 | 420,373,647 |
| கல்வி அமைச்சு - மதிப்பாய்வும் கணக்காய்வும் | 20,067,284 | 12,270,906 | 37,697,648 |
| மாணவர் புலமைப்பரிசில்கள் | 183,757,269 | 169,384,746 | 548,768,320 |
| அதிகரிக்கும் செலவினம் | 65,168,161 | 80,823,914 | 349,021,404 |
| பாடசாலை அபிவிருத்தி- | | | |
| - நிதி மானியம் | 30,094,997 | 18,788,090 | 56,433,087 |
| - பராமரிப்பு மானியம் | 233,129,987 | 124,899,994 | 358,029,982 |
| கடன் சேவை | 53,546,824 | | 53,546,824 |
| மொத்தம் | 1,973,186,144 | 2,088,661,310 | 9,265,670,955 |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, கடன் மற்றும் மானிய நோக்கங்களிற்காக இலங்கை மத்திய வங்கியில் இரண்டு கட்டுநிதி நிதியக் கணக்குகள் செயற்படுத்தப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்குகளின் செயற்பாடுகளின் விபரங்கள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அவற்றின் மீதிகள் என்பன பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

| | கட்டுநிதிக் கணக்குகள | | | |
|---|---|---|---|---|
| | **கடன் (எஸ்எல் 127)** | | **மானியம் (எஸ்எல் 128)** | |
| | **ஐ.அ.டொலர்** | **ரூபா** | **ஐ.அ.டொலர்** | **ரூபா** |
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 1,872,797 | 238,146,464 | 73,127 | 9,298,891 |
| கூட்டு:- | | | | |
| மீள் நிரப்பல்கள் | 8,847,866 | 1,160,273,163 | 5,379,122 | 700,603,464 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம்/ (நட்டம்) | | (3,767,589) | | (1,342,617) |
| | 10,720,663 | 1,394,652,038 | 5,452,249 | 708,559,738 |
| கழி: | | | | |
| பற்றுதல்கள் | (5,387,830) | (697,368,155) | (4,230,742) | (548,844,044) |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 5,332,833 | 697,283,883 | 1,221,507 | 159,715,694 |
| | ======== | ========= | ======== | ========= |

**5. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**5.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு**

2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஒஎவ்ஏ/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு சுற்றறிக்கையின்படி, செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் அடுத்தவரும் ஆண்டின் மார்ச் 31 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் 2014 ஆகஸ்ட் 09 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2. நிதிசார் மற்றும் செயலாற்றல் மீளாய்வு**

**5.2.1 நிதிகளின் பயன்பாடு**

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, செயற்திட்டத்தின் கூறுகளிற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அவற்றின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **மூலம்** | **நிதிகளின் ஒதுக்கீடு** | | **2012 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள்** | | **சதவீதமாக பயன்பாடு** |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டெர் (மில்) | ரூபா (மில்) | ஐ.அ.டெர் (மில்) | ரூபா (மில்) | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் | 65.00 | 6,955.00 | 56.48 | 6,043.85 | 86.89 |
| மானியம் | 15.00 | 1,605.00 | 14.08 | 1,506.69 | 93.87 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இலங்கை அரசாங்கம் | 25.30 | 2,707.00 | 15.48 | 1,657.11 | 61.21 |
| | --------- | ----------- | -------- | ----------- | ------- |
| மொத்தம் | 105.30 | 11,267.00 | 86.04 | 9,207.65 | 81.72 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டிற்கான செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், சகல ஒன்பது மாகாணங்களிலும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் கட்டிடங்கள், கணனி மற்றும் மொழி ஆய்வு கூடங்களின் முன்னேற்றத்திற்கான ரூபா 2,045 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒதுக்கீட்டின் 41 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 835 மில்லியன் தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்கான செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிகாரம், வெளிநாட்டு பயிற்சி வகுதிகளின் கீழ் ரூபா 67 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒதுக்கீட்டின் 4.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 3 மில்லியன் தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டிற்கான அமுலாக்கல் திட்டத்தின் கீழ் உள்நாட்டு பயிற்சிகளின் நடவடிக்கைளிற்காக கடனின் கீழ் செய்யப்பட்ட ரூபா 113.13 மில்லியன் மற்றும் மானியங்களில் செய்யப்பட்ட ரூபா 194.40 மில்லயன் தொகையான ஒதுக்கீடுகளில் மீளாய்வாண்டின் போது ரூபா 105.54 மில்லியன் தொகையான கடன் பெறுகைகள் மற்றும் ரூபா 128.76 மில்லியன் தொகையான மானியங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஈ) 2013 ஆம் ஆண்டிற்கான அமுலாக்கல் திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட பாடசாலைகளிலிருந்து விலகியோருக்கான புலமைப்பரிசில் மானியத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 383 மில்லியன் தொகையில், மீளாய்வாண்டின் போது ரூபா 183.76 மில்லியன் தொகையான மானிய பெறுகைகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**5.3.2 பௌதீக செலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டிற்கான அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்லூரிக்கான (எஸ்எல்ஐஏரீ) தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 17,600,000 தொகையான ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அத்தகைய சொத்தக்கள் மீளாய்வாண்டின் போது ஐந்து வழங்குநர்களிடமிருந்து ரூபா 17,722,466 கிரயத்தின் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் தரத்தைக் கருத்திற்கொள்ளாமல் அவற்றினை சிபார்சு செய்திருந்தது.

(ஆ) 1,400 இரண்டாம் மட்ட பாடசாலைகளிற்கான பாடசாலை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நோக்கங்களிற்கான நிதி உதவி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 1,366 பாடசாலைகளிற்கு மாத்திரமே அத்தகைய மானியங்கள் செய்யப்பட்டிருந்தது. இதன்படி, ரூபா 284,800,000 தொகையான மொத்த மானியங்களில், ரூபா 220,910,000 கூட்டுமொத்தத் தொகையான மானியங்கள் விடுவிக்கப்பட்டிருந்தது. அதாவது 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 78 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) நிதிக் கஷ்டங்கள் உள்ள 1,454 மாணவர்களிற்காக “சிசுறியா புலமைப்பரிசில் திட்டத்தின்” கீழ் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 14,540,000 கூட்டுமொத்தத் தொகையான மானியங்கள் உரிய ஆண்டுகளில் கொடுப்பனவை செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. அதாவது உயர்கல்விக்கு தகுதியுடைய நிதிக் கஷ்டங்கள் உள்ள மாணவர்களிற்கு உதவுவதற்கு புலமைப்பரிசில் திட்டத்தின் நோக்கம் நிதி உதவிசெய்வதிலுள்ள தாமதம் காரணமாக அடையப்பட முடியாதிருந்தது.

(ஈ) 2013 திசெம்பர் 31 வரை சிவில் வேலைகளின் கீழ் ரூபா 3.385 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் சிவில் வேலைகள் மீதான ஒப்பந்த பதிவேடு செயற்திட்ட கண்காணிப்பு பிரிவால் பேணப்பட்டிருக்கவில்லை. ஆகவே, செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பௌதீக முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவில் உடனடியாக பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(உ) 27 பாடசாலைகளிற்காக ரூபா 37,927,554 கிரயத்தில் தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் வழங்குவதற்கு ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. அதில், உரிய பாடசாலைகளின் கட்டிட நிர்மாண வேலைகள் உரிய திகதியில் பூர்த்தியாக்கப்பட்டிருக்காமையால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 16 பாடசாலைகளிற்காக வழங்கப்பட்ட ரூபா 24,846,400 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்தது.

(ஊ) செயற்திட்டமானது 150 மஹிந்தோதயா தொழில்நுட்ப பீடங்களிற்காக ரூபா 174,900,593 கிரயத்தில் விஞ்ஞான மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் வழங்குவதற்கு மூன்று ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டது. உரிய உபகரணங்கள் பாடசாலைகளிற்கு நேரடியாக வழங்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு 07 பாடசாலைகளிற்காக வழங்கப்பட்ட ரூபா 5,551,650 பெறுமதியான 12 உபகரண விடயங்களின் மாதிரியை தெரிவு செய்திருந்ததுடன் அதனுடன் தொடர்புபட்ட அத்தகைய உபகரணங்களின் தக்கத்தினை உறுதிப்படுத்ததாதுடன் தரத்தில் குறைபாடுகள் உள்ளன. எவ்வாறாயினும், தொழில்நுட்ப குறிபுரைகள் நிலைபேற்றுடன் தரத்தினை உறுதிப்படுத்தப்பட்டிருக்காத உபகரணங்களிற்காக கொடுப்பனவுகளை கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பல பாடசாலையிலுள்ள உபகரணங்கள் ஆய்வு கூடங்களிற்கான கட்டிட நிர்மாணத்திலுள்ள தாமதம் காரணமாக முறையான பாதுகாப்பில்லாமல் பாடசாலை வளவில் அமைந்திருந்தது.

(எ) மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக, ரூபா 199,285,500 பெறுமதியான ஒப்பந்தங்கள் 150 மஹிந்தோதயா தொழில்நுட்ப பீடங்களிற்காக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு வழங்கப்பட்டிருந்தது. அத்தகைய ஒப்பந்தங்கள் உரிய பீடங்களிற்காக கட்டிட நிர்மாணத்திற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. ஆகவே, அத்தகைய தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் முறையான பாதுகாப்பில்லாமல் பாடசாலை வளவில் இருந்தது.